## வெலிவிடிய திவிதுர பிரதேச சபை
## காலி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 25 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜூன் 14 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து வெலிவிலிட திவிதுர பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த நூலகப் புத்தகங்களுக்காக கிடைத்திருந் கழிவு ரூபா 108,379 தொகையினை கணக்கீடு செய்திருக்க வில்லை. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | செலவிடப்பட்ட தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டது. |
| (ii) | 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக 10% பிடிபணம் பெற வேண்டிய மூலதன உதவிக் கணக்கில் மற்றும் நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் கணக்கில் ரூபா 111,766 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டு இருந்தது. | சரியான கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிர்மாண வேலை செயற்படும் போது 2019 ஆண்டில் சரி செய்வேன். |
| (iii) | சபைக்குச் சொந்தமான ரூபா 185,000 இற்கான டிரக்டர் டேலர் ஒன்றின் தட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் கிரயத்தை கணித்து கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கிரயத்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீண்டுவரும் செலவு எனக் கணித்து கணக்கீடு செய்யப்பட்டது. |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| காணி மற்றும் கட்டிடங்கள் மீதியில் உள்ளடங்கியிருந்த ரூபா 200,000 பெறுமதியான சனசமூக கட்டிடம் அடங்கிய காணியின் பெறுமதியை முறையான அங்கீகாரம் இன்றி 2018 ஆண்டின் போது புத்தகங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், கணக்குகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பெறுமதி இடையே ரூபா 200,000 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது | பதிவழிப்பதற்காக முறையான அங்கீகாரம் காணப்பட வேண்டியதுடன், பதிவேடுகளில் பெறுமதியை சரிசெய்து கொள்ள வேண்டும். | சபைத் தீர்மானம் ஒன்றின் மூலம் மெய்ப்பிப்பு சபை ஒன்றின் மூலம் காணியின் பெறுமதி அகற்றப்பட்டிருந்ததுடன், பதிவேடுகளில் வித்தியாசம் காணப்படவில்லை. |

**(இ) பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(i) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வந்து காணப்படும் பெற வேண்டிய ரூபா 745,538 தொகைக்கான மூலதன உதவியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்க வில்லை. | பெற வேண்டிய கணக்கு மீதி தீர்க்கப்பட வேண்டும். | முத்திரைக் கட்டணம் பெற்றுக்கொள்வது தொடர்பாக பிரதான செயலாளருக்கு பல முறை அறிவித்துள்ளேன். |
| **(ii) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 2014 மற்றும் 2016 ஆண்டுகள் தொடர்பாக கூட்டுப்பெறுமதி ரூபா 444,108 தொகைக்கான செலுத்த வேண்டிய நிர்மாண வேலை கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்க்க வேண்டும். | கொடுப்பனவுக்காக உள்ளூராட்சி திணைக்களத்தில் இருந்து நிதி ஏற்பாடுகள் விண்ணப்பித்துள்ளதுடன், கிடைத்தவுடன் தீர்ப்பேன். |

**(ஈ) கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப் படாமையால் கூட்டுத்தொகை ரூபா 106,150,752 தொகைக்கான 06 கணக்கு விடயங்களை திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | மெய்ப்பித்தல் சபை ஒன்றின் மூலம் கணக்கு மீதி உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

| சட்டங்கள், விதிகள், பிரமா ணங்கள் மற்றும் முகாமை த்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி<br>ரூபா. | இணக்கமின்மை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தி யோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 | - | பாதீட்டுடன் வரவுகள் மற்றும் செலவுகளை ஒப்பிட்டு மிகைகள் மற்றும் பற்றாக்குறை களை காட்டும் கூற்று ஒன்று திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தயாரித்திருக்கவில்லை. | முரண்களுக் கான காரணத் துடன் இணக்கக் கூற்றில் சமர்ப்பிக்க வேண்டும். | இறுதிக் கணக்கு களுடன் இணக்கக் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 702(3) | -- | ஒப்பந்தவேலை சம்பந்த மாக கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உடன்படிக்கைகளின் பிரதிகள் அனுப்புவேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,494,186 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,582,178 தொகை ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையி டப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 19,000 | 19,026 | 5,803 | 100,713 | 320,000 | 18,835 | 35,940 | 87,491 |
| வாடகை | 788,000 | 58,200 | 56,700 | 1,750 | 1,175,200 | 43,200 | 43,200 | 250 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 94,000 | 510,400 | 518,750 | 7,000 | 187,500 | 493,050 | 480,950 | 15,350 |
| | 901,000 | 587,626 | 581,253 | 109,463 | 1,682,700 | 555,085 | 560,090 | 103,091 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஜனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 103,091 தொகையாக இருந்ததுடன், ஆண்டிற்கான சிட்டை யிடல் ரூபா 587,626 தொகையாகும். அதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 690,717 தொகையாக இருந்த போதிலும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 581,253 வருமானம் சேகரித்தல் 84 சதவீதமாக இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | இணங்குகின்றேன். |

### 2.2.3 வீதவரி மற்றும் வரிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(1) மற்றும் (2) இன் பிரகாரம் வீதவரி வலயங்கள் வெளியிடப்பட்டு வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரிவுகளின் பிரகாரம் செயற்பட்டு வீதவரி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அபிவிருத்தி செய்யப் பட்ட பிரதேசம் ஆன பின்னர் வீதவரிக்காக வர்த்தமானி வெளியிட ஒழுங்கு செய்வேன். |

### 2.2.4 ஏக்கர் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டிற்கான சிட்டையிடலுடன் அறவிடப் பட வேண்டிய ஏக்கர் வரி ரூபா 106,517 தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 5,804 தொகையாக காணப்பட்டமையால், ஏக்கர் வரி அறவீடுகள் 5 சதவீதத்தை விட குறைந்த அளவிலே காணப்பட்டது.<br><br>1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நிலுவை ஏக்கர் வரி அறவீடு செய்வதற்கு பிரதேசத்தில் கணிப்பீடொன்றின் மூலம் ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிய தரப்பினரை சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யவும் மற்றும் ஏக்கர் வரி அறவீடு செய்ய வேண்டிய தரப்பினரை இனங்காண்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணிப்பீடொன்றின் மூலம் எதிர்காலத்தில் நிலுவை மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 55,417 தொகை மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 27,890,658 தொகை பெறவேண்டி இருந்தது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | கடிதத்தின் மூலம் பிரதான செயலாளருக்கு அறிவித்துள்ளேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை திண்மக் கழிவுப்பொருள் அகற்றுவதற்காக திவிதுர தோட்டத்தில் 20 பர்சஸ் காணிப் பகுதியொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒரு வாரத்திற்கு ஒரு முறை சேகரிக்கப் படும் சுமார் 0.25 தொன் அளவு உக்கக்கூடிய குப்பைகள் காணியில் போடப்படுவதுடன், கிடங்குகளில் போட்டு மூடுவதற்கான ஒழுங்கு பண்ணப்பட்டுள்ளன. | திண்மகள் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக நீண்டகாலத் திட்டம் தயாரிக்கப் பட வேண்டும். | இணங்குகின்றேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்கான உலகலாவிய சுட்டிகள் மூலம் சபையின் அதிகாரப் பிரசேத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்டகாலத் திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திக் கான நீண்ட காலத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு பொது மக்களின் வாழ்க்கை நிலை உயர்த்த வேண்டும். | அதிகாரப் பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்காக எதிர்காலத்தில் திட்டம் ஒன்று தயாரிக்கின்றேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) (i) சபையின் ஊழியர் கட்டமைப்பு இரண்டாம் தர பிரிவில் 07 பதவிகளின் வெற்றிடம் காணப்பட்டதுடன், ஆரம்ப பிரிவில் 04 பதவிகள் வெற்றிடமும் ஒரு பதவி மிகையும் காணப்பட்டது. | வெற்றிடங்களை முறைப்பிரகாரம் நிரப்புவதற்கும் மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்களை நிரப்புவதற்காக அங்கீகாரம் வழங்கும் படி உள்ளூராட்சி ஆணையாளருக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளேன். சபை தீர்மானம் ஒன்றின் படி ஒப்பந்த அடிப்படையில் சாரதி ஒருவர் சேர்க்கப்பட்டு சம்பளம் செலுத்தப்பட்டது. |
| (ii) அங்கீகரமின்றி சேர்க்கப்பட்டிருந்த ஊழியர் ஒருவருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படியாக ரூபா 317,649 தொகை சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த பதவியை முறைப்படுத்த வேண்டும். | |
| **(ஆ) ஊழியர் கடன்** | | |
| சேவையை வறிதாக்கிய ஊழியர் ஒருவரிடம் ரூபா 144,706 இற்கான கடன்மீதி ஒன்றினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2007 ஆண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 430,000 தொகை பெறுமதியான மின்பிறப்பாக்கி ஒன்று மற்றும் 2007 ஆம் ஆண்டின் போது சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 220,000 பெறுமதியான வள்ளம் பயன்படுத்தப்படாமல் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. | திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப் படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தில் இருந்து அறிவுரை கேட்டுள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | எத்கந்துர புறநெகும கட்டிடத்தின் 2017 ஆண்டின் போது பொருத்தப்பட்டிருந்த மின்உயர்த்தி 2018 பெப்ரவரி மாதம் முதல் செயற்படாது காணப்பட்டது. | உத்தரவாதக் காலம் தொடர்பாக கண்டறிந்து குறிப்பிட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவித்து திருத்த வேலை மேற்கொள்ள வேண்டும். | திருத்த வேலைக்காக பாரிய தொகை ஒன்று செலவிடப நேரிடுவ துடன், எதிர்காலத்தில் திருத்த வேலை மேற்கொள்வேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவு விடயமொன்றிற்காக ஒதுக்கப் பட்டிருந்த ரூபா 10,000 இற்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக இலக்கு செலவை நெருங்கு வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | 04 செலவு விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 91,296,887 தொகையான இருந்ததுடன், அவை 26 சதவீதம் முதல் 78 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக இலக்கு வருமானத்தை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 04 செலவு விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 16,306,010 தொகைக் கான சேமிப்புகள் காணப்பட்டதுடன், அவை 25 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறைச் சாத்தியமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | அடுத்த வருடம் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பேன். |

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 133 மற்றும் 134 இன் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் (தென்மாகாண) 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/நா.ச.லே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்ட தென அறிவிக்கின்றேன். |